பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி
சென்னை - 4

10-08-2025 6.30

ஞாயிற்றுக்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாடு விரைவான பொருளாதார வளர்ச்சியை கண்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. ஆபரேஷன் சிந்தூர் வெற்றியில் உள்நாட்டுத் தொழில்நுட்பம் முக்கிய பங்கு வகித்ததாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி குறித்து திமுக அரசு பெருமைப்பட ஏதுமில்லை என்று பிஜேபி கூறியுள்ளது.

4. தூய்மைப் பணியாளர்களின் கோரிக்கையை நிறைவேற்ற திமுக அரசு முன்வர வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

5. ஆசியக் கோப்பை இளையோர் குத்துச்சண்டை போட்டியின் 19 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் இந்தியா 3 தங்கம், 7 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

< < < < > > > >

நாடு விரைவான பொருளாதார வளர்ச்சியை கண்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று பெங்களூருவில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

<<<<>>>>

ஆபரேஷன் சிந்தூர் வெற்றியில் உள்நாட்டுத் தொழில்நுட்பம் முக்கிய பங்க வகித்தாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

மத்தியப்பிரதேசத்தின் *Umariya*-வில் அதிநவீன ரயில் உற்பத்தி பிரிவிற்கான கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் சம்பவத்திற்கு ஆபரேஷன் சிந்தூர் மூலம் உரிய பதிலடி கொடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாட்டின் இறையாண்மைக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் எந்த நாடு செயல்பட்டாலும் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றும் அவர் எச்சரித்தார்.

பாதுகாப்புத் துறையில் இதுவரை இல்லாத அளவிற்கு சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய அணுகுமுறையே பாதுகாப்புத்துறையின் வளர்ச்சிக்குக் காரணம் என்றும் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

*தூய்மைப் பணியாளர்களின் கோரிக்கையை நிறைவேற்ற திமுக அரசு முன்வர வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு. சண்முகம் வலியுறுத்தியுள்ளார்.*

*சென்னை மாநகராட்சி வளாகம் அருகே போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தூய்மைப் பணியாளர்களை இன்று சந்தித்த பின் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.*

*தூய்மைப் பணியாளர்களின் கோரிக்கைகளை அரசின் கவனத்திற்கு கொண்டு செல்ல உள்ளதாகவும் திரு. சண்முகம் தெரிவித்தார்.*

<<<<>>>>

*தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி குறித்து முதலமைச்சர் பெருமைப்பட ஏதுமில்லை என்று பிஜேபி மகளிரணித் தலைவர் திருமதி வானதி சீனிவாசன் கூறியுள்ளார்.*

*இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் 10 ஆண்டுகளுக்கு முன்பாகவே நாட்டின் இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக தமிழகம் திகழ்ந்ததாக குறிப்பிட்டுள்ளார்.*

*2021ஆம் ஆண்டு முதலமைச்சராக திரு. மு.க. ஸ்டாலின் பொறுப்பேற்றபோதும் அதே இடத்தில்தான் இருந்ததாகவும், தற்போதும் அதில் எந்த மாற்றமும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.*

இதில் தமிழக முதலமைச்சர் படைத்த சாதனை என்ன என்றும் அவர் வினவியுள்ளார்.

உண்மையை மறைத்து மக்களை ஏமாற்றும் முயற்சியாகவே முதலமைச்சர் பொய்ப் பிரச்சாரத்தில் ஈடுபடுவதாகவும் திருமதி வானதி சீனிவாசன் குற்றம் சாட்டியுள்ளார்.

<<<<>>>>

நாகையில் நடைபெற்று வரும் புத்தக காட்சியின் ஒரு பகுதியாக பழந்தமிழர் தொல்லிசைக் கருவிகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இது தங்களை வெகுவாக கவர்ந்துள்ளதாக பார்வையாளர்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

<<<<>>>>

நீலகிரி மாவட்டம் தேவர்சோலை பகுதியில் கால்நடைகளை தாக்கி கொன்ற புலியைப் பிடிக்கும் பணியில் வனத்துறையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

மூன்றாவது நாளாக 5 கூண்டுகளை வைத்து வனத்துறையினர் இப்பணியில் ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte - Saravanan - 43 Sec)*

<<<<>>>>

அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட தொழிற்சாலைகள் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சியை

அதிகரித்ததில் முக்கிய பங்கு வகிப்பதாக அக்கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் திரு. கே.பி. முனுசாமி கூறியுள்ளார்.

கிருஷ்ணகிரியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்திய அரசின் திட்டங்களைப் பெயர் மாற்றி திமுக அரசு செயல்படுத்துவதாக குற்றம் சாட்டினார்.

திமுக அரசின் தவறான செயல்பாடுகள் காரணமாக தமிழகத்தின் கடன் சுமை அதிகரித்துள்ளதாகவம் அவர் குறிப்பிட்டார்.

சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி - அஇஅதிமுக கூட்டணி வெற்றி பெறும் என்றும் திரு. கே.பி. முனுசாமி நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(Sound Byte - Senthamaraikannan - 61 Sec)*

<<<<>>>>

## மாவட்டச் செய்திகள்

திருவாரூர் மாவட்டம் நெடுவாக்கோட்டை அருகே அகஸ்தீஸ்வரர் கோவில் வளாகத்தில் குறுங்காடு அமைக்கும் பணியை மாநில அமைச்சர் திரு. டி.ஆர்.பி. ராஜா இன்று தொடங்கி வைத்தார்.

-----------

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு வட்டத்திற்கு உட்பட்ட அங்கன்வாடி மையத்தில் ஆட்சியர் திருமதி அழகு மீனா இன்று ஆய்வு செய்தார்.

-----------

மதுரை மாவட்டத்தில் 'வேர்களைத் தேடி' திட்டத்தின்கீழ் வெளிநாடுகளில் இருந்து வருகை புரிந்துள்ள 100 தமிழ் இளையோருடன் ஆட்சியர் திரு. பிரவீன் குமார் இன்று கலந்துரையாடினார்.

-----------

ராணிப்பேட்டை மாவட்டத்தில் பெய்த கனமழை காரணமாக அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்கள் சேதமடைந்தன.

-----------

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் தொழில்பழகுநர் பயிற்சிக்கான சேர்க்கை முகாம், சங்கராபுரம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் நாளை நடைபெற உள்ளதாக ஆட்சியர் திரு. எம்.எஸ். பிரசாந்த் கூறியுள்ளார்.

-----------

உதகமண்டலத்தில் விடுமுறை தினமான இன்று சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளது.

-----------

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தடை செய்யப்பட்ட குட்கா உள்ளிட்ட பொருட்களை வைத்திருந்தது தொடர்பாக 2 பெண்கள் உட்பட 4 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

-----------

<u>*விளையாட்டுச் செய்திகள்*</u>

ஆசிய இளையோர் குத்துச்சண்டை போட்டியின் 19 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் இந்தியா 3 தங்கம், 7 வெள்ளி. 4 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

பாங்காக்கில் நடைபெற்ற இப்போட்டியின் 19 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் 54 கிலோ எடைப்பிரிவில் Nisha-வும், 57 கிலோ எடைப்பிரிவில் Muskan-ம் தங்கப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் 75 கிலோ எடைப்பிரிவில் ராகுல் தங்கப்பதக்கம் வென்றார்.

60 கிலோ எடைப்பிரிவில் Vini, 65 கிலோ பிரிவில் Nisha, 75 எடைப்பிரிவில் Aarti Kumari, 80 கிலோ எடைப்பிரிவில் Kritika Wasan மற்றும் Prachi Tokas வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் 65 கிலோ எடைப்பிரிவில் Mousam மற்றும் 90 கிலோ எடைப்பிரிவில் Hemant-ம் வெள்ளிப் பதக்கம் வென்றனர்.

*மகளிர் 51 கிலோ எடைப்பிரிவில் Yakshika, 70 கிலோ எடைப்பிரிவில் Akansha-வும், ஆடவர் 55 கிலோ எடைபிரிவில் Sivam, 85 கிலோ எடைப்பிரிவில் Gaurav-ம் வெண்கலப்பதக்கம் வென்றனர்.*

<<<<The End>>>>